(6 pages) **Reg. No. :** ....................................

**Code No. : 30149** **Sub. Code : J 1 TL 11/ S 1 TL 11**

U.G. (CBCS) DEGREE EXAMINATION, NOVEMBER 2018.

First Semester

Part I — Tamil

பொதுத்தமிழ் — I

(For those who joined in July 2016 onwards)

Time : Three hours Maximum : 75 marks

பகுதி அ — (10 × 1 = 10 மதிப்பெண்கள்)

அனைத்து வினாக்களுக்கும் விடை தருக.

சரியான விடையைத் தேர்ந்தெடு.

1. கவிமணியின் இயற்பெயர்

(அ) வெ. ராமலிங்கம் பிள்ளை

(ஆ) முத்தையா

(இ) தேசிய விநாயகம் பிள்ளை

(ஈ) சுப்பையா

2. வைரமுத்து எழுதிய நூல்

(அ) ஆசியஜோதி

(ஆ) கொஞ்சம் தேனீர் நிறைய வானம்

(இ) பாஞ்சாலி சபதம்

(ஈ) பிசிராந்தையார்

3. நாகியாது – இலக்கணக் குறிப்பு தருக.

(அ) குற்றியலிகரம் (ஆ) குற்றியலுகரம்

(இ) பண்புத்தொகை (ஈ) வினைத்தொகை

4. பொருள் தருக. மாரி

(அ) மலை (ஆ) மழை

(இ) உணவு (ஈ) உலகம்

5. இராமனையும் இலக்குவனையும் வேள்வியைக் காப்பதற்காக அழைத்துச்சென்றவர்

(அ) வசிட்டன்

(ஆ) கலைக்கோட்டு முனிவர்

(இ) வால்மிகி

(ஈ) விசுவாமித்திரன்

6. காய்களைக் கொண்டு விளையாடும் விளையாட்டு

(அ) தெள்ளேணம் (ஆ) பாவையாடல்

(இ) அம்மானை (ஈ) ஊசல்



Nesamony Memorial Christian College, Marthandam

7. சிறுகதையின் மன்னன் யார்?

(அ) புதுமைப்பித்தன் (ஆ) ஜெயகாந்தன்

(இ) பாவண்ணன் (ஈ) பாட்டாளி

8. பொன்னீலன் எழுதிய சிறுகதை

(அ) மனோபாவம் (ஆ) ஆறு

(இ) வசக்குதல் (ஈ) ஐஸ்பிரியாணி

9. பரமார்த்த குருகதையை எழுதியவர்

(அ) பாரதியார் (ஆ) ந. பிச்சமூர்த்தி

(இ) கால்டுவெல் (ஈ) வீரமாமுனிவர்

10. தமிழ்நாட்டின் வால்டர் ஸ்காட் என்று புகழப்பட்டவர்

(அ) தமிழ்வாணன் (ஆ) எஸ்ஏபி

(இ) சுஜாதா (ஈ) கல்கி

பகுதி ஆ — (5 × 5 = 25 மதிப்பெண்கள்)

அனைத்து வினாக்களுக்கும் விடையளி (அ) அல்லது (ஆ) தேர்ந்தெடு.

பின்வரும் வினாக்களுக்கு <u>250</u> சொற்களில் விடை தருக.

11. (அ) ஒன்று எங்கள் ஜாதியே கவிதையில் கண்ணதாசன் கூறும் கருத்துக்களை ஆய்க.

(அல்லது)

(ஆ) கல்யாண்ஜி குறிப்பிடும் 'கண்டும் காணாமல்' குறித்து ஆராய்க.



12. (அ) முதல் எழுத்துக்களைச் சான்றுடன் விளக்குக.

(அல்லது)

(ஆ) தமிழில் வழங்கும் கிரந்த எழுத்துக்களை விவரிக்க.

13. (அ) அன்பு, அடக்கம், ஒழுக்கம் பற்றிய வள்ளுவர் கருத்துக்களைத் தருக.

(அல்லது)

(ஆ) சிறுபஞ்சமூலம் தரும் சூழலியல் செய்திகளைத் தருக.

14. (அ) பொன்னகரம் தலைப்புப் பொருத்தத்தை ஆய்க.

(அல்லது)

(ஆ) ஆறு சிறுகதையின் கதைக் கருவினைப் புலப்படுத்துக.

15. (அ) புதுக்கவிதை எழுத்தாளர்களைக் குறிப்பிடுக.

(அல்லது)

(ஆ) தமிழ் நாடக வகைகளைப் புலப்படுத்துக.



Nesamony Memorial Christian College, Marthandam

பகுதி இ — (5 × 8 = 40 மதிப்பெண்கள்)

அனைத்து வினாக்களுக்கும் விடையளி (அ) அல்லது (ஆ) தேர்ந்தெடு.

பின்வரும் வினாக்களுக்கு 600 சொற்களில் விடை தருக.

16. (அ) கைத்தொழில் குறித்து நாமக்கல் கவிஞர் கூறும் கருத்துக்களை ஆய்க.

(அல்லது)

(ஆ) தேசப்பிதாவிற்கு ஒரு தெருப்பாடகனின் அஞ்சலி கவிதையில் மு. மேத்தா குறிப்பிடும் செய்திகளைத் தெளிவுறுத்துக.

17. (அ) மொழி முதல், மொழி இறுதி எழுத்துக்களைச் சான்றுடன் விளக்குக.

(அல்லது)

(ஆ) ஒலிப்பு மாறுபாடுகள் மற்றும் பொருள் மாறுபாடுகள் ஆகியவற்றைச் சான்றுடன் விளக்குக.

18. (அ) கம்பராமாயணத்தில் உறவுகள் என்னும் தலைப்பில் முனைவர் பே. மகேஸ்வரி தரும் கருத்துக்களை எழுதுக.

(அல்லது)

(ஆ) அற இலக்கியங்களில் இடம்பெற்றுள்ள மேலாண்மைச் செய்திகளை விளக்குக.



19. (அ) ராஜா வந்திருக்கிறார் சிறுகதையில் சித்தரிக்கப்பட்டுள்ள குழந்தைகளின் உலகத்தினைத் தெளிவுறுத்துக.

(அல்லது)

(ஆ) வசக்குதல் சிறுகதையில் பொன்னீலன் குறிப்பிடும் சமூக நிலையினைப் புலப்படுத்துக.

20. (அ) தமிழில் சிறுகதையின் தோற்றமும் வளர்ச்சியும் பற்றி எழுதுக.

(அல்லது)

(ஆ) புதின இலக்கியத்தின் தோற்றம் வளர்ச்சி குறித்து எழுதுக.

———————



*Nesamony Memorial Christian College, Marthandam*